# ஜெயங்கொண்டம் நகராட்சி

| DATE OF MEETING OF THE COUNCIL | MCR NO | SERIAL NUMBER AND SUBJECT IN AGENDA | DECISION OF THE COUNCIL |
|---|---|---|---|
| | | ஜெயங்கொண்டம் நகராட்சியில் 2021 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30.06.2021 ஆம் தேதி புதன் கிழமை காலை **11.00** மணி அளவில் நடைபெற்ற சாதாரண கூட்டத்தின் நடவடிக்கை,<br>தனி அலுவலர்,<br>ஜெயங்கொண்டம் நகராட்சி. | |
| 30.06.2021 | **360** | **பொருள் : 1**<br>ஜெயங்கொண்டம் நகராட்சி ஆணையர் அவர்களின் 06/2021 ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் பார்வையிட்டு, பதிவு செய்யலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 30.06.2021 | **361** | **பொருள் : 2**<br>அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்களின் **22.03.2021** ஆம் தேதிய ந.க.ஈ**3/4585/2020** எண்ணிட்ட கடிதத்தின்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தேர்தல் – 2021, 150 - ஜெயங்கொண்டம் சட்டமன்றப் பேரவைத் தொகுதி தேர்தல் **06.04.2021** அன்று நடைபெற உள்ள நிலையில், ஜெயங்கொண்டம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வாக்குச்சாவடிகளில் மாற்றுத் திறனாளி வாக்காளர்கள் வாக்களிக்க ஏதுவாக மூன்று சக்கர நாற்காலிகள் விநியோகம் செய்யப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.1,29,000/-னை M/s. R.R.Remedies, சேலம் என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.<br>**அலுவலக குறிப்பு :**<br>தேர்தல் பணி என்பதால் நகராட்சி விதி 15 ன் கீழ் பணி மேற்கொள்ளப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.1,29,000/- வழங்கியதை மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.<br>**ந.க.எண். 3826 / 2021 / எப்.1** | அனுமதிக்கப்பட்டது |
| 30.06.2021 | **362** | **பொருள் : 3**<br>உதவி மின்பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் ஜெயங்கொண்டம் அவர்களின் கடிதம் க.எஉமிபொ/வ.செயம/தோ. டீழகூ/அகஎண்.**147** நாள். இணைப்பு எண்.**1249**க்கு கூடுதல் மின்பளுவிற்கான மதிப்பீடு தொகை ரூ.**18025/–** செலுத்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>பணியின் அவசர அவசியம் கருதி , நகர்மன்றத்தின் முன் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலகர் முன் அனுமதி பெற்ற தொகை வழங்கியுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.468.2018.இ1** | அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td>30.06.2021</td><td>363</td><td><u>பொருள் : 4</u><br>ஜெயங்கொண்டம் நகராட்சியின் அலுவலகத்தில் உள்ளூர் மற்றும் வெளியூர் தபால் அனுப்புவதற்கு தபால் தலை (Stamp) தீரும் நிலையில் உள்ளது. எனவே, அத்தியாவசிய தேவையின் அடிப்படையில் Stamp கொள்முதல் செய்ய செலவினத் தொகை ரூ.2000/- ஐ வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :</u><br>மன்றம் அனுமதிக்கலாம்.<br><u>ந.க.எண். 4127 / 2021 / சி1</u></td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>30.06.2021</td><td>364</td><td><u>பொருள் : 5</u><br>ஜெயங்கொண்டம் நகராட்சியின் தணிக்கை பிரிவிற்கு 2019-2020 ஆம் நிதி ஆண்டிற்கு தணிக்கை கணக்கினை வெளிப்புற கணக்கர் மூலம் தயார் செய்வதற்கு ஆகும் செலவினம் ரூ.48,000/-ஐ வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :</u><br>அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.<br><u>ந.க.எண். 1485 / 2021 / அ1</u></td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>30.06.2021</td><td>365</td><td><u>பொருள் : 6</u><br>ஜெயங்கொண்டம் நகராட்சியில் 2014-15 ஆம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் செந்துறை சாலையில் நவீன கலவை உரக்கிடங்கு அமைத்தல் பணிக்கு நகராட்சியில் சேகரமாகும் குப்பைகளை தரம் பிரிப்பதற்கு இயந்திரம் (Trommel) கொள்முதல் செய்யப்பட்டது. மேற்கண்ட பணியானது தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் நகராட்சிகளில் உரக்கிடங்கு பகுதியில் பெரிய அளவிலான குப்பைகளை தரம் பிரிக்காமல் அந்தந்த பகுதிகளில் நுண் உரம் தயாரிக்கும் மையம் (Micro Compost Centre) அமைப்பதற்கு வழங்கப்பட்ட சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரின் திருத்திய நிர்வாக அனுமதியின் அடிப்படையில் உரக்கிடங்கு அமைக்கும் பணி கைவிடப்பட்டதை தொடர்ந்து நுண் உரம் தயாரிக்கும் மையம் பணிகள் மேற்கொள்ளப்பட்டதால் மேற்படி கலவை உரக்கிடங்கு அமைத்தல் பணிக்கு கொள்முதல் செய்யப்பட்ட குப்பைகள் தரம் பிரிக்கும் இயந்திரத்தினை (Trommel) 26.05.2021 ஆம் தேதிய சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 1894/தி3/2020 எண்ணிட்ட செயல்முறை ஆணைக்கிணங்க, கும்பகோணம் நகராட்சிக்கு மேற்கண்ட குப்பைகள் தரம் பிரிக்கும் இயந்திரத்தை (Trommel) வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.<br><u>அலுவலக குறிப்பு :</u><br>மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br><u>ந.க.எண்.1832 / 2003 / அ2</u></td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>30.06.2021</td><td>366</td><td><u>பொருள் : 7</u><br>ஜெயங்கொண்டம் நகராட்சியில் 2021-2022 ஆம் ஆண்டு வருவாய் நிதியின் கீழ் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்கு அணுகு சாலை மற்றும் ஆர்.சி.சி. பைப் கல்வெர்ட் அமைத்தல் பணி மேற்கொள்ள 04.06.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு தொகை ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு (சதவிகிதத்தில்)</th></tr>
</table></td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>1.</td><td>திரு. P.கருப்பையா,<br>புதுக்கோட்டை.</td><td rowspan="2">1,70,372.08</td><td>1,71,409.00</td><td>(+) 0.61 %<br>கூடுதல்</td></tr>
<tr><td>2.</td><td>திரு. S.பிச்சை,<br>ஜெயங்கொண்டம்.</td><td>1,70,293.00</td><td>(-) 0.05 %<br>குறைவு</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு :</u>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.S.பிச்சை, ஜெயங்கொண்டம் என்பவரது ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டது. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் முன் அனுமதியை எதிர்நோக்கி 16.06.2021 அன்று தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
<u>ந.க.எண். 4203 / 2021 / இ1</u>
</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.06.2021</td>
<td>367</td>
<td>
<u>பொருள் : 8 (367)</u>
ஜெயங்கொண்டம் நகராட்சியில் வருவாய் நிதி – 2021-2022-ன் கீழ் புதிய நகராட்சி அலுவலக நகராட்சிப் பொறியாளர் அறையில் Wall paneling, A/C Fitting Wall Texture பணி மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள 16.06.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு தொகை ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு (சதவிகிதத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>திரு. P.கருப்பையா,<br>புதுக்கோட்டை.</td><td rowspan="2">8,53,258.33</td><td>8,51,351.35</td><td>(-) 0.22 %<br>குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு. C.செந்தில்குமார்,<br>புதுக்கோட்டை.</td><td>8,60,355.09</td><td>(+) 0.83 %<br>கூடுதல்</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு :</u>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. P.கருப்பையா, புதுக்கோட்டை என்பவரது ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டது மன்றத்தின் பார்வைக்கு.
<u>ந.க.எண். 310 / 2015 / இ1</u>
</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 30.06.2021 | **368** | **<u>பொருள் : 9</u>**<br><br>ஜெயங்கொண்டம் நகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணி மேற்கொள்வதற்கு தினக்கூலி பணியாளர்களை கொண்டு Out Sourcing மூலம் 2018-2019ம் ஆண்டிற்கு துப்புரவு பணி மேற்கொள்ளும் ஒப்பந்த காலம் 30.04.2019ம் தேதியுடன் முடிவடைந்து உள்ளது. 2019-2020ம் ஆண்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி நகராட்சி நிர்வாக ஆணையருக்கு கடிதம் அனுப்பப்பட்டு உள்ளது. மேலும் கொரோனா நோய் தொற்று நடைமுறையில் உள்ளதாலும் பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தினை முன்னிட்டும் நிர்வாக நலன் கருதி 06/2021ம் மாதம் வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே தொடர்ந்து கொரோனா நோய் தொற்று நடைமுறையில் உள்ளதாலும் பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தினை முன்னிட்டும் நிர்வாக நலன் கருதியும் நகராட்சி நிர்வாக ஆணையர் ஒப்பந்தப்புள்ளி அனுமதி கிடைக்கப்பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி ஆணை வழங்கும் வரை ஏற்கனவே ஒப்புதல் அளித்த ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொண்டு வரும் அங்கீகரிக்கப்பட்ட துரை &கோ என்ற நிறுவனத்திற்கு துப்புரவு பணிகள் மேற்கொள்வதற்கு ஒப்பந்த அடிப்படையில் 07/2021ம் மாதம் முதல் 09/2021 ம் மாதம் வரை பணிபுரிய 134 நபர்களுக்கு தினக்கூலி ஊதியம் வழங்கிடவும், அதற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும்ம் மன்றத்தின் முன் அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதியும், வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**<u>ந.க. எண்.238/2018/எச்1</u>** | அனுமதிக்கப்பட்டது |
| 30.06.2021 | **369** | **<u>பொருள் : 10</u>**<br><br>மாண்புமிகு.தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரியலூர் மாவட்டத்திற்கு மாவட்ட வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்திற்கு **17.12.2020** அன்று வருகை புரிவதையொட்டி, ஜெயங்கொண்டம் நகராட்சியில் நடைபெற்ற மற்றும் நடைபெற்று வரும் திட்டப்பணிகளின் விபரங்களை மாலை தமிழகம் நாளிதழில் **17.12.2020** அன்று விளம்பரம் செய்யப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.14,700/- வழங்க கோரி நாளிதழுடன் கேட்பு பட்டியல் வரப்பெற்றுள்ளது. பட்டியல் தொகை ரூ.14,700/-னை மாலை தமிழகம் நாளிதழ் விளம்பர நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>ந.க.எண். 4288 / 2021 / இ1</u>** | அனுமதிக்கப்பட்டது |